# விளம்பரம் VLAMBARAM

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 13 JUNE 15, 2003 பாலம் 12



வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Vice president/Sales Rep.)

HOMELIFE HIGHER STANDARDS



எமது நிறுவனத்தில் தொழில் புரிய வீட்டு, வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969


## குழந்தைகளின் வாசிப்புத்திறனும் எங்கள் பங்கும்

*"வாசிப்பதால் மனிதர் பூரணமடைகிறார்"*
*"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும்"*

ஆனால் உங்கள் குழந்தையின் வாசிப்பின் வெற்றி உங்கள் வழிகாட்டலில் தங்கியுள்ளது. குழந்தையுடன் இணைந்து வாசிப்பது என்பது அவர்களுக்கு மிக முக்கியமான செய்தியை வழங்குகிறது. இது பிள்ளைக்கு இரண்டு பிரதான விடயங்களை அறிவுறுத்துகின்றது. முதலாவது இது மனித வாழ்வுக்கு அதன் மேன்மைக்கு மிக முக்கியமானதென்பதும் அடுத்தது இச்செயல்பாடு மனதிற்கு மிக மகிழ்ச்சி தரும் ஓர் அருமருந்தென்பதுமாகும்.

வாசிப்பு பழக்கம் என்ற சிறந்த செயல்பாட்டை குழந்தையிடம் உருவாக்குவதற்கான சிறந்த வழி என்ன?

ஒவ்வொரு நாளும் உங்கள் குழந்தையுடன் இணைந்து ஒரு சிறிது நேரமாவது வாசியுங்கள். இது உங்கள் இருவருக்குமே மகிழ்ச்சியைத் தரும். இதற்கு உகந்த நேரம் இரவுப் படுக்கைக்கான நேரமே. ஆனால் ஏனைய பொழுதுகளும் கூட வாசிப்பிற்கு இயந்தனவே. வாசிக்கும் பொழுதில் குறைந்த பட்சமாவது குறுக்கீடும், இடையூறும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இதற்கு ஏற்றவாறு வாசிக்கும் நேரத்தை திட்டமிடுங்கள். இந்த நேரம் உங்கள் குடும்பத்தின் மிகவும் பெறுமதி மிக்கவொன்றாக நீங்கள்



கருதிக்கொள்ள வேண்டும். உங்கள் பிள்ளையும் இதைப் புரிந்து கொள்வதோடு எதிர்காலத்தில் நீங்கள் மறந்தாலும் பிள்ளை உங்களுக்கு நினைவூட்டி செயலில் தூண்டுவார். ஒரு குழந்தை வாசிப்பில் இவ்வாறு ஆர்வம் காட்டினால் பிள்ளையின் எதிர்காலம் ஒளிமயமானதொன்றாக அமைந்து விடும். சிறு பராயத்தில் இருந்தே நீங்கள் இந்த வாசிப்பு பழக்கத்தை பின்பற்ற முடியும். இவ் வாசிப்பு பழக்கத்தை சிறு வயதில் இருந்து வளர்த்து வருவதன் ஊடாக பிள்ளையின் வாழ்வியல் மாற்றங்களையும் கொண்டு வர முடியும்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## அருள்விருந்து

* பெருக் கெடுத்து ஓடும் ஆற்றைக் கடப்பதில் ஒருவன் எச்சரிக்கையாயிருக்கிறான். சான்றோரெனின் தீய நெறிகளைப் பற்றி அவர்கள் எச்சரிக்கையாயிருக்கின்றனர்.

* சுயநலத்துக்காகவென்று கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணுவது பிரார்த்தனையானது. உண்மையான பிரார்த்தனையில் மனிதன் தன்னை மறந்து விடுகிறான்.




## உங்கள் மோட்கேஜ் பக்கம்

எந்த மோட்கேஜ் எமக்கு உகந்தது?
மூடப்பட்ட (closed) மோட்கேஜும், திறந்த (Open) மோட்கேஜும்

தேடித்திரிந்து பொருத்தமான ஒரு வீடு உறுதியாகி விட்டது. அடுத்த பிரச்சனை எப்படியான மோட்கேஜ் எங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று முடிவு செய்வது. பலவிதமான மோட்கேஜ் பொருள்கள்/உருப்படிகள் (Mortgage Products) சந்தையில் இருக்கும்போது ஒவ்வொருவரின் தனிப்பட்ட தேவைகளை அறிந்து பொருத்தமான/இலாபகரமானதொன்றை தேர்ந்தெ தடுப்பதற்கு அந்தத்துறையில் ஒரு நிபுணரின் உதவியை நாடுவது மிகவும் நன்மை பயக்கும். அந்த நிபுணர் ஒரு வங்கி அதிகாரியாகவோ அல்லது சுதந்திரமான மோட்கேஜ் முகவராகவோ (Independent Mortgage Broker) இருக்கலாம். தமது நம்பிக்கைக்குப் பாத்திரமான (Trust Worthy) ஒருவரை அணுகுவது நன்று. நிதி நிர்வாக விடயங்களில் அனுபவமும் பகுப்பாய்வு (Analize) மனோபாவமும் கொடை நுகர்வோர் தாமாகவே தகவல்களை சேகரித்து முடிவெடுக்கலாம். இணையவலை (Internet) இதற்குப் பேருதவியாக இருக்கும்.

மோட்கேஜ் துறையில் புழக்கத்திலுள்ள பதங்களையும் (Terms) சில நடைமுறையில் சாத்தியமான உதாரணங்களையும் பார்ப்பது விடயத்தை விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கும். திறந்த அடமானம் (Open Mortgage) மூடப்பட்ட அடமானம் (closed mortgage) என்ற இருவகையான மோட்கேஜ் ஒப்பந்தங்கள் பிரபலமானவை. இவ்விரண்டின் அம்சங்களையும் கொண்ட இணைந்த மோட்கேஜ் (Hybrid Mortgage) ஒன்றும் உள்ளது.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)


Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்

பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!



TEL: 905 848 5151 FAX: 905 848 8502

OPEN 10:30AM - 8:30PM MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA



Singapore Communication

Since 1991

We Sell New & Used Cell Phones, Pagers & Accessories For

WE HAVE PRICE PLANS & PHONES TO SUIT YOUR NEEDS.

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)



துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.





Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)



AERO CANADIAN TOUR & TRAVEL INC.

"Something Special on Land & Air"

- World wide Airline tickets
- Canada, U.S.A. Luxury Charter Bus Services
- Colombo Airport<=>Home Land Complete Van/Hotel Arrangement
- Toronto Airport Pickup / Drop Off

TICO

COLOMBO TORONTO $960


Tel: 416-299-8687 Fax: 416-299-5767

3300 McNicoll Ave. Suite 218, Scarborough, ON M1V 5J6

www.aerocanadian.com

# செய்யும் தொழிலில், வெற்றி பெற





இர்ரமசாமியும், சிவாவும் ஏறதாழ பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரேசமயத்தில் இலங்கையிலிருந்து கனடாவில் குடியேறிவர்கள். இலங்கையில் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். சிவா இலங்கையில் தோட்டம், துரவு என்று வசதியாக வேலையாட்களுடன் ஒரு காலத்தில் இருந்தவர். இராமசாமி அப்படி அல்ல. உழைக்கும் வர்க்கத்தில் இருந்து வந்தவர்.

ஆனால் இந்தப் பத்தாண்டுகளில் இராமசாமியின் வளர்ச்சி கனடாவில் பிரமிக்கத்தக்கவராய் உள்ளது. அசுர வளர்ச்சி எனலாம். முதல் சில வருடங்கள் எல்லோரையும் போல கஷ்டப்பட்டார். பிறகு இந்த நாட்டையும், இந்த நாடு தரும் எண்ணிறந்த வாய்ப்புக்களையும் புரிந்து கொண்டு செயல்பட ஆரம்பித்தார். முதலில் சிறிய வெற்றி, அதன் பின் சில தோல்விகள்; பிறகு வெற்றி வெற்றி மேல் வெற்றி.

**பெரி. முத்துராமன்**

இதுதான் அவர் கடந்து வந்த பாதையின் வழித்தடம். எல்லாவற்றிற்கும் அடிப்படை தன்னம்பிக்கையும், தைரியமுமே. சிவாவின் வாழ்க்கையோ சலனமற்ற நீரோடை போன்ற வாழ்க்கை. கணவன், மனைவி இருவரும் வேலைக்கு போகின்றனர். இராமசாமியைப் போன்றே கார், வீடு என்று எல்லாம் இருந்தாலும் மோட்கேஜ் அல்லது அடமானத்தின் தொகை பெரும் சுமையாக இருந்து வருகின்றது. வெளித்தோற்றத்துக்கு இரு குடும்பமும் ஒன்றே போல் தோன்றினாலும் "வளமை" யில் இரு குடும்பங்களுக்கும் இடையே பெரும் இடைவெளியே உள்ளது. ஏனிந்த நிலை?

காரணம்:
முன்னவர் சொந்தத் தொழில் புரிகிறார்.
பின்னவர் வேலைக்குப் போய் வருகிறார்.

அதனால் தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் எல்லாம் செல்வத்தில் மிதந்து விட்டார்கள்; வேலைக்கு போனவர்கள் எல்லாம் நொடிந்து விட்டனர் என்று பொருள் அல்ல. சொந்தமாக தொழில்செய்யும் போது ஆபத்துக்களும், இடையூறுகளும் அதிகமாகவே வாழ்க்கையில் குறுக்கிடும். அதைத் தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் கடக்கும் போது வெற்றிக்கனி பெரிதாகக் கிடைக்கின்றது.

எத்தகைய குணங்கள் உள்ளவர்கள் சொந்த வியாபாரம் அல்லது தொழில் செய்யத் தகுதி உடையவர் என்று பார்ப்போம். ஏனென்றால் சொந்தத் தொழில் என்பது எல்லோருக்கும் ஒத்துவரக்கூடியது அல்ல.
சொந்தத் தொழிலில் சில சமயங்களில் வருமானம் மிகுதியாக வரலாம்; சில சமயம் ஒன்றுமே வராமலும் போகலாம்; சுய கட்டுப்பாட்டுடன் இரண்டையும் சமமாகப் பாவிக்கத் தெரிந்து வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி வாழத்தெரிந்தவனே சொந்தத் தொழிலில் நிலைத்து நிற்பான்; வெற்றியும் பெறுவான். திட்டமிடல், வியாபாரத்திற்கு மட்டுமல்ல சொந்த வாழ்க்கைக்கும் மிகவும் அவசியம். அதுவும் சம்பள வருமானம் இல்லாதவர்கள் திட்டமிடலில் பலவீனமாக இருந்தால் அவர்கள் வாழ்க்கை எவ்வளவு சம்பாதித்தாலும் முடிவில் துன்பகரமாகவே அமையும்.

வெற்றி பெறும் தொழில் முனைவர்களிடம் பொதுவாகக் காணப்படும் குணாதிசியங்களை அடுத்த இதழில் பார்ப்போம். நாம் ஆரம்பத்தில் பார்த்த இராமசாமியிடம் இந்த குணாதிசியங்கள் இருக்கின்றன. இதுவே அவரின் வெற்றியின் இரகசியம். (தொடரும்)


SAFETY TRUCKS
Training School Ltd.

Training & Trucking
Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது
தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம்
(9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும்
பயிற்சிகள் வழங்கப்படும்.




In Classes
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON



வாங்க வீடு விற்க
விற்க சசி வாங்க

SASI SELVARATNAM
(Sales Rep)



Homelife/GTA Realty Inc.

Cell :(416) 725 1122
Tel. :(416) 321 6969


HOUSE FOR SALE
BELLAMY & LAWRENCE


2 அறைகள் கொண்ட சிறந்த முறையில் அழகுபடுத்திய தனிவீடு விற்பனைக்குள்ளது. பத்து கார்கள் ஒரே நேரத்தில் தரித்து வைக்கக்கூடிய இட வசதிகள் உண்டு. தொடர்புகளுக்கு:
Cell : (416) 725 1122 Tel. : (416) 321 6969



கடன்கொடுக்கலாம்! வாங்கலாம்!
Mortgage/loans/line of Credit

* வீடு, வியாபாரம், சுயதொழில் - கடன் பெறலாம்.
* Down Payment ஒரு பிரச்சினையா? தயங்காதீர்கள்.
* 2nd, 3rd மோட்கேஜை - ஒன்றாக்கலாம்.





தொடர்புகளிற்கு:- ஜோஜ் பரந்தாமன்
416-332-0933

* வித்தியாசம் அறிய என்னுடனும் தொடர்பு கொள்ளலாம்*.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




*சின்னையா சிவநேசனின்*

## நூல்களுக்கு அறிமுகவிழா

*டா தமிழ் எழுத்தாளர் இணையம் திரு. சின்னையா சிவநேசன் அவர்களின்*

*1. சிறுவர் பாடல்கள்* *2. தங்கச்சி கொழும்புக்கோ...?*

*ஆகிய இரு நூல்களுக்கும் ஓர் அறிமுகவிழாவினை 15.06.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணிக்கு ஸ்காபரோ ஆட்சி மன்றச் சபா மண்டபத்தில் நடத்த இருக்கிறது.*

*கலை இலக்கிய வாணர்களையும் ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்*
*குரு அரவிந்தன், (செயலாளர்)*
*கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்*

---

## மகப்பேறும் மகளிர் மருத்துவமும்

ஓர் அறிவியல் நூல்

## நூல் வெளியீட்டு விழா

ஆக்கியோன்: வைத்திய கலாநிதி
செ. ஆனைமுகன்

பெண்கள் நோயற்று வாழவும் மகப்பேறு பற்றிய விபரங்களை அறிந்து நலமுடன் வாழவும் வழிசொல்லும் தமிழ்மொழி மூலமான அறிவியல் நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: Scarborough Civic Centre, Council Chamber
150 Borough Drive, Scarborough, on
காலம்: 21 June 2003 சனிக்கிழமை பி.ப. 6.00 மணி

புடன்
தமிழ்கலை தொழில்நுட்பக் கல்லூரி, ரொறன்ரோ, கனடா - 416 - 757 9601

---

## கலந்துரையாடல்

*ஆசிய சங்கீதமும் சமூக மாற்றமும்*

நிலாஞ்சனா பட்டாசார்யா
(கோர்னல் பல்கலைக்கழகம், அமெரிக்கா)

"தெற்காசிய இளைஞர்கள் எந்த விதமான சங்கீதத்தில் நாட்டமும் விருப்பமும் கொண்டுள்ளார்கள்"

*இடம்: ஸ்காபரோ சிவிக் சென்றர், (ஸ்காபரோ சிவிக் சென்ரர் சப்வே அருகில்)*
*திகதி: ஜுன் 21,2003 (சனிக்கிழமை)*
*காலம்: பிற்பகல் 3.00 தொடக்கம் 8.00 வரை*
*தொடர்பு: சண் - 416 -431 5095*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இலவச அனுமதி*
*ஆதரவாளர்கள்: அகதிகள், குடிவரவாளர்கள் தகவல் நிலையம், ரொன்ரோ*
*ரொன்ரோ பாப்பா பாரதி மன்றம்*
*இளைஞர் சமாதான அமைப்பு*

---

## வாழ்த்துகிறோம்

யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலம் (ஸ்ரான்லி கல்லூரி) பழைய மாணவர்/ஆசிரியர் சங்கக் கனடாகிளை யாழ். பல்கலைக்கழக புதிய உபவேந்தர் கலாநிதி பிரமணியம் மோகனதாஸ் அவர்களை வாழ்த்துகிறது. கலாநிதி சுப்பிரமணியம் மோகனதாஸ் அவர்கள் யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் என்பதையிட்டு அவரையும் அவரது குடும்பத்தினரையும் எமது சங்கம் வாழ்த்துவதில் பெருமையும் பூரிப்பும் அடைகிறது.

இப்படிக்கு தலைவர்
க. சிவனேஸ்வரன், (905) 946 1498

*யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலம் (ஸ்ரான்லி கல்லூரி பழைய மாணவர்/ஆசிரியர் சங்கம் ஒன்றுகூடலும் விளையாட்டு போட்டிகளும்.*

*பழைமையும் புகழும் வாய்ந்த யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி) பழைய மாணவர் / ஆசிரிய சங்கம் எதிர்வரும் ஆனி மாதம் 28ஆம் திகதி 2003 ஆண்டில் (யூன்-28-2003) சனிக்கிழமை அன்று காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மோனிங்சையிட் பூங்காவில் இடம் 2இல் (Moringside Park Areas) ஒன்று கூடி பாலர் தொடக்கம் பெரியோர் வரை எல்லோருக்கும் பல நிகழ்ச்சிகளுடன் மதிய உணவும் வழங்கப்படும் சகல பழைய மாணவர் & ஆசிரியர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் வருக வருக என வரவழைக்கின்றோம்.*

*மேலதிக தொடர்புகளுக்கு (905) 946 1498, 416 - 816 4970, (905) 201 8784, (905) 944 1611.*

*இப்படிக்கு*
*தலைவர்*
*க. சிவனேஸ்வரன், (905) 946 1498.*


# மணப்பெண் அலங்காரம்
# கேக் மேக்கிங்
# Bridal Dressing & Cake Making

Modern Cake Decoration





UK Sugar Craft
Wilton U.S.A. Method



- Paper Tole • பேப்பர் ரோல்
- Cake Decoration • கேக் மேக்கிங்
- Bead Jewellery • முத்து நகை மாலை
- Hair Styling • தலை அலங்காரம்
- Facial (Herbal) • பேசியல்
- Bridal Dressing • மணப்பெண் அலங்க்ராம்
- Normal Dressing • சேலை அலங்கரித்து விடுதல்
- Eye Brow Shaping • கண் புருவ அலங்காரம்
- Saree Tassel • சாறி குஞ்சம்
- Saree Pleating • சாறி மடிப்புக்கள்

**Mathumai S.**

*Diploma Holder of Mallika School of Home Science - Sri Lanka*

**Tel: 416-424-2528**



# அன்புத் தமிழ்


## பாரதியாரின் பாடல்களில் உணர்ச்சி

கவிஞர்கள் உணர்ச்சி உள்ளவர்கள் - உணர்ச்சி, கவிஞர்களுக்கு மட்டுமல்லாது, பிற கலைஞர்களுக்கும் இருத்தல் வேண்டும். உணர்ச்சி இன்றிக் கலைவெளிப்பாடுகள் இல்லை. உண்மையில், உணர்ச்சி இன்றி வாழ்க்கையே இல்லை. உணர்ச்சி இல்லாதவர் மரம்போல்வர்; மக்கட் பண்பில்லாதவர்.

**கவிஞர் வி. கந்தவனம்**

ஆனால், உணர்ச்சி உள்ளமைக்கும் உணர்ச்சி வயப்படுதலுக்கும் வேறுபாடுள்ளது.

'உணர்வு என்ற சொல்லுக்கு அறிவு, தெளிவு, நினைவு என்று பொருள்.



'உணர்ச்சி' என்னும் சொல் உணர்வின் அடியாகப் பிறந்தாலும் வழக்கில் அது உணர்வலைவு அல்லது உள்ளத்தாக்கம் (Emotion) என்ற பொருளைக் குறிக்கவே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. உணர்வு மூளையுடன் தொடர்புடையது. உணர்ச்சி உள்ளத்துடன் தொடர்புடையது.

உணர்வு விடயங்களில் உள்ளம் தலையிடும் பொழுது உணர்வு உணர்ச்சியாகின்றது. அது இயல்பானது. ஆயின், உணர்ச்சி மிகும் நிலைக்கு-அளவினை மீறும் நிலைக்கு உணர்ச்சி வயப்படுதல் என்று பொருள். உணர்ச்சி மிகும் பொழுது உணர்வு கெடுகின்றது, உண்மை மறைந்து விடுகின்றது. எனக்கெதுக்கு வம்பு என்று பகுத்தறிவு பின்வாங்கி விடுகின்றது.

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்

என்று பாடிய பாரதியாரும் உணர்ச்சி வயப்பட்டு பாடிய இடங்களில் உண்மை மறைந்து போய் இருக்கிறது; பகுத்தறிவு பின் வாங்கி இருக்கிறது. இத்தகைய சில இடங்களைப் பாரதியார் பாடல்களில் தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று தொடங்கும் பாடல் முழுவதையும் தெரியாது போனாலும் இந்த அடியைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. இது மிகவும் பிரபலியமானது. தமிழின் பெருமை பற்றி எழுதுகின்றவர்களும் பேசுகின்றவர்களும் இந்த அடியை மேற்கோள் காட்ட மறக்க மாட்டார்கள். ஆனால், இந்த அடியைப் பற்றிச் சற்று நிதானமாக, ஆழமாக இதுவரை யாராவது சிந்தித்திருப்பார்களா என்பது கேள்விக்குரியது.

ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய் மொழியே மேலானது; இனிமையானது. இலக்கிய வளம் இல்லாத, எழுத்து வடிவம் இல்லாத மொழி பேசுகின்றவர்களுக்கு கூட அவர்களின் மொழியே இனிமையுடையதாக இருக்கும். இந்த இனிமை பழக்கத்தாலும் பயிற்சியாலும் அனுபவிக்கப்படுவது. தனது தாய்மொழியிலும் இன்னொரு மொழி இனிமையாக இருக்கிறதென யாராவது கூறின் அவருக்குத் தனது தாய்மொழியில் அதிக பயிற்சி இல்லை என்பதே பொருளாகும்.

இந்தப் பொது இயல்பின் அடிப்படையில் பாரதியாரும் தனது தாய்மொழியாம் தமிழ் மொழி இனிமையுடையது என்று கூற விரும்புவதில் வியப்பொன்றில்லை. ஆனால், கரும்பிலும் இனியது, தேனினும் இனியது, அமிழ்தினும் இனியது என்று தமிழின் இனிமையை மரபு வழியாக எடுத்துச் சொல்வதை விடுத்து, பெரியதோர் ஆராய்ச்சி செய்யப்பட்டு, உலகத்திலேயே தமிழ் மொழியைப்போல இனிமையான மொழி வேறு எங்கும் இல்லை என்று கண்டறியப் பட்டுள்ளது எனக் கூறுவது சிந்தனைக் குரியது. இது 'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடும்' பொதுமக்களின் அறியாமையை கண்டு ஆத்திரங் கொண்ட உணர்ச்சிக் கூற்றேயன்றி உண்மைக்கூற்று அன்று என்பதைப் பகுத்தறிவாளர் நன்கு உணர்வர்.

இந்த அடிப்படையிலே பின்வரும் அடிகளையும் நோக்குதல் வேண்டும்:

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை**
**உண்மைவெறும் புகழ்ச்சி இல்லை.**

உலகத்திலே எங்கணுமே பிறக்கவில்லை என்று யான் சொல்வது உண்மை, வெறும் புகழ்ந்துரையல்ல என்றும் அடித்துச் சொல்வதற்குத் தக்க ஆதாரங்கள் வேண்டும். ஆரியர்கள் வியாசரையும் வால்மீகியையும் அவதார புலவர்களெனப் போற்றுகிறார்கள். ஆங்கிலேயர் சேக்ஸ்பியர்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்கிறார்கள். பிரெஞ்சுக்காரர் பியரே டி ரொன்ஸாட் (Pierre De Ronsrd) என்பவரைப் பெரிய புலவராகக் கருதுகிறார்கள். இவ்விதமே கிரேக்கருக்கு ஹோமரும் சீனருக்கு தூ பூ (Tu Fu) வும் யப்பானியருக்கு முரசாக்கி சீக்கிபு (Murasaki Shikibu) வும் பெரும் புலவர்கள்.

இவர்களல்ல, கம்பரும் வள்ளுவரும் இளங்கோவுமே உலகத்தில் பெரிய புலவர்கள் என்று இந்த நாட்டவர்கள் ஏற்றுக் கொண்டது கிடையாது. ஒன்றில் பாரதியார் தனது கருத்தை உலகக் கருத்தாக்கி ஊமையராய்ச், செவிடர்களாய்க், குருடர்களாய் இருப்போருக்கு உணர்ச்சி ஊட்டுதற்பொருட்டு வேண்டுமென்றே கூறியிருத்தல் வேண்டும். அல்லது தானே மொழிப்பற்றினால் உணர்ச்சி வயப்பட்டு 'பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' எனப் மிகைப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(தொடரும்)


TELUS mobility™




GET A FREE
CELL PHONE

WITH FREE UNLIMITED
LOCAL CALLING
& LONG DISTANCE
IN CANADA
(UP TO 4 MONTHS WITH CONTRACT)
அத்துடன்
FREE CD($ 50 Value)

$30 டொலர்கள்
= unlimited evening & weekend
+ Lunch Hour & 50 Minutes
Voice Mail, Call Waiting,
Conference Call

உங்கள் சகலவிதமான செலுலர் போன் தேவைகளுக்கும்
தமிழில் உரையாட அழையுங்கள்.

Tel : 416-288-6451

* HOME DELIVERY AVAILABLE
PAGETRON COMMUNICATION INC.

இரசாயன சேர்க்கை கொண்ட செயற்கை சம்பூக்களை பாவித்து
மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையைவிடுங்கள்

Vitaplex Shampoo & Conditioner
(சம்போ அன்ட் கன்டிஷனர்)
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.




ரொறன்ரோ
மிசிசாகா
ஸ்காபரோ
நோர்த் யோர்க்
மொன்றியல்
ஒட்டாவா
இலுள்ள
அனைத்து
தமிழ்
வர்த்தக
நிலையங்களிலும்
பெற்றுக்
கொள்ளலாம்




Special Offer

உங்கள் அபிமானம் பெற்ற
Vitaplex Sampoo & Conditioner
இன்று முதல் புதிய விலையில்

Shampoo $7.99
Conditioner $7.99
Shampoo & Conditioner $14.99

(கனடாவில் தயாரிக்கப்படும் சகல வகையான சம்பூக்களும்
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது)

# உங்கள் மோட்கேஜ் பக்கம்




மோட்கேஜின் மிக முக்கியமான அம்சம் வட்டி வீதமாகும். வட்டிவீதம் பொதுவாக நிலையானவட்டி (Fixed Rate) மாறுகின்ற வட்டி (Variable Rate) என இருவகை யானவை. மாறுகின்ற வட்டியை திறந்த அடமானம் என தவறாகப் புரிந்து கொண்டு ஏமாற்றதிற்குள்ளாவோர் பலர்.

திறந்த அடமானம் மூலம் ஒப்பந்த கால எல்லைக்குள் எந்த வித குற்றப்பணமும் இன்றி இன்னொரு நிதி நிறுவனத்திற்கு அடமானத்தை எடுத்துச் செல்லக்கூடிதாக இருக்கும். ஒப்பந்த காலத்தில் வீட்டினை விற்று முழுப்பணத்தையும் செலுத்த அல்லது தகுதியான இன்னொருவருக்கு மாற்ற குற்றப் பணமேதும் செலுத்த வேண்டியதில்லை. இவ்வாறான நெகிழ்ச்சித் தன்மைகள் கொண்ட காரணத்தினால் மூடப்பட்ட அடமானத்தைவிட திறந்த அடமானத்திற்கான வட்டி வீதம் சற்று அதிகமாக இருக்கும். நிலையான வட்டியின் கீழ் அல்லது மாறுகின்ற வட்டியின்கீழ் இவ் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## முருகதாஸ்

மூடப்பட்ட அடமானம் இது திறந்த அடமானத்திற்கு நேரெதிர் தன்மைகளை கொண்டிருக்கும்.ஒப்பந்த கால எல்லைக்குள் அடமானத்தை வேறொரு வங்கிக்கோ அல்லது நபருக்கோ மாற்ற நேரிடின் குற்றப்பணம் கட்ட வேண்டி வரும். நெகிழ்ச்சித் தன்மை களற்ற இந்த ஒப் பந்தத்தின் கீழ் பொது வாக வட்டிவீதம் குறை வாகக் காணப்படும். இரண்டு விதமான வட்டி வீதங்களின் (Fixed or Variable) கீழ் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.



மூன்றாவது வகையான Hybrid Mortgage ஒப்பந்தம் பொதுவாக முதல் பாதிக்காலம் மூடப்பட்ட அடமானமாகவும் மீதிக்காலம் திறந்த அடமானமாகவும் இருக்கும். மாறுகின்ற வட்டிவீதமே (Variable interest ratio) முதல் பாதியில் இதன் வட்டியாக இருக்கும். மிகக் குறைவான நிதி நிறுவனங்களே இந்தவித மோட்கேஜ் ஒப்பந்தங்களை அனுமதிக்கின்றன.

நிலையான வட்டி (Fixed Interest Ratio). பெயர் உணர்த்துவதற்கேற்ப ஒப்பந்தகாலம் முடியும்வரை ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட வட்டவீதம் நடைமுறையில் இருக்கும். கடன் வட்டிவீதம் (lending Ratio) இவ் ஒப்பந்த காலத்தில் கூடலாம் அல்லது குறையலாம். ஆனால் நிலையான வட்டி அடமான முள்ளவர்களை இது பாதிக்காது. வரலாற்று ரீதியில் மிகவும் குறைந்த வட்டவீதம் நடைமுறையிலுள்ள இக்காலத்தில் நிலையான வட்டி வீதம் மிகவும் பிரபலமாகி உள்ளது. இக்கட்டுரை எழுதப்படும் வேளையில் நிலையான வட்டி வீதம் 4.799 வீதமாக உள்ளது. சர்வதேச பொருளாதார நிலைமைகளினால் இவ்வீதம் இன்னும் குறையக்கூடும்.

நிதி விடயங்களில் Risk எடுக்க விரும்பாதவர்களும் திட்டமிட்டு செலவு செய்பவர்களும், நிரந்தரத் தன்மையும் அமைதியான மனநிலையை விரும்பு பவர்களும் நிலையான வட்டியுடனான



மோட்கேஜை தேர்ந்தெடுப்பது உகந்தது.

மாறும் வட்டிவீதம் (Variable interest ratio) காலத் திற்கு காலம் ஏறி இறங்கும் Prime lending rate உடன் இணைக்கப்பட்டிருக்கும். இப்போதுள்ள Prime lending ratio 5% ஆகும். பொதுவாக இந்த வீதத்தில் இருந்து இன்னவீதம் குறைத்து உங்களுக்கு மோட்கேஜ் தருவோம் என்று ஒவ்வொரு நிதி நிறுவனமும் அறியத்தரும். உதாரணமாக மொன்றியல் வங்கி Prime - 0.5% (5 - 0.5 = 4:5%) என்று அறிவித்திருக்கிறது. ING DIRECT என்ற நிதி நிறுவனம் Prime - 0.6% (5 - 0.6 = 4.4%) என்ற வீதத்தில் மாறும் வட்டிவீதத்தை கொண்டிருக்கிறது. இந்த வீதம் ஒப்பந்தகாலம் வரை நீடிக்கும். Prime Leading rate 4% ஆகக் குறைந்தால், மொன்றியல் வங்கியில் எடுக்கப்பட்ட அட மானம் 3.5%லும், ING DIRECT எடுக்கப்பட்ட அடமானம் 3.4% லும் இருக்கும். Prime Rate 6% ஆக அதிகரிப்பின் இதே விகிதாசாரத்தில் மாற்றமடையும். வட்டி வீதம் அதிகரிக நிதி விடயத்தில் Risk எடுக்கத் தயங்காதவர்கள், நாளாந்தம் கனடா, சர்வதேச நிதி விவகாரங்களை அவதானித்து முன் கூட்டி நடவடிக்கை எடுக்கும் தகுதி உள்ளவர்கள் இந்த Variable Rate மோட்கேஜ் எடுத்து இலாபம் (சில நேரங்களில் நட்டம்) அடையலாம்.

நண்பர் ஒருவர் Pickering இல் வசிப்பவர், வியாபார நிமித்தம் Brampton க்கு குடிபெயரவிருக்கிறார். அவரது மோட்கேஜ் புதுப்பிக்க வேண்டிவந்த பொழுது அவரை திறந்த அடமானத்திற்கு மாறுகின்ற வட்டியில் வைத்திருக்கும்படி ஆலோசனை கூறினேன். காரணம் என்னவெனில் இன்னும் 6 தொடக்கம் 9 மாதங்களில் அவரது Pickering வீடு விற்கப்படும் திறந்த அடமானம் என்பதால் விற்கும் போது குற்றப்பணம் கட்ட வேண்டிவராது. புதுப்பிக்கும் பொழுது Variable வட்டி 5% ஆகவும் Fixed/Open 5.75% ஆகவும் இருந்தது. குறுகிய காலத்திற்குள் வட்டி வீதம் அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கவில்லை.

இதே நண்பர் Brampton இல் அடுத்த இரு மாதங்களில் வீடுவாங்கும் போது அவருக்கு Fixed rate மூடப்பட்ட அடமானம் உகந்ததாக இருக்கும். 5 வருடங்களுக்கு 4.79% மிகக் குறைந்த வட்டிவீதமாக இருப்பதோடு மோட்கேஜ் பற்றிய யோசனை இன்றி தனது வியாபாரத்தில் மனதைச் செலுத்தலாம். குறைந்து 5 வருடத்திற்கு வீட்டினை விற்கும் உத்தேசம் கிடையாது. இன்னுமொருவர், முதலீட்டு விவகாரங்கள், பொருளாதார விடயங்களில் அக்கறை உள்ளவர். Notel இல் பங்குகள் வாங்கி சில ஆயிரங்களை இழந்தவர். பத்திரிகைகளில் Business Section வாசிப்பதில் ஆர்வமுள்ளவர். இவர் வீடு வாங்கும் போது முதல் மூன்று வருடங்கள் Prime - 0.4% க்கான மாறும் வட்டி வீதத்தைக் கொண்ட இரண்டும் கெட்டான (Hybrid Mortgage) அட மானத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இன்னும் இரண்டு வருடங்களுக்காவது வட்டி வீதம் பாரதூரமாக அதிகரிக்கும் சாத்தியம் குறைவு. அப்படி அதிகரிப்பினும் அதனால் வரக்கூடிய நட்டத்தை தாங்கக் கூடியவர் அல்லது வட்டி குறைந்த காலத்தில் தவணைக் கட்டணத்தை அதிகரித்து ஒட்டுமொத்தமாக வரக்கூடிய நட்டத்தை தவிர்க்கக் கூடியவர். இதனால் இந்த ஏற்பாடு அவருக்கு உகந்தது.


வீட்டை விற்று இலாபம் பெற நினைத்த ஒருவருக்கும், மகளுக்கு சீதனம் கொடுக்க வீடு வாங்கிய இன்னொருவருக்கும் திறந்த மாறும் வட்டியுடைய (Open at varible ratio) அடமானம் உகந்ததென்று தீர்மானிக்கப்பட்டது. காரணம் விரைவில் பெயர்மாற்றம்/விற்பனை நடைபெறக்கூடிய சூழ்நிலை இருப்பதனால் குற்றப்பணத்தை தவிர்க்கவும், குறைந்தவட்டி செலுத்தவும் இது உதவும். ஆக ஒவ்வொருவரது தனிப்பட்ட சூழ்நிலை, வட்டிவீதம் பற்றிய அறிவு, வீடுவாங்கும் நோக்கங்கள் என்பனவற்றை மனதில் கொண்டு சந்தர்ப்பத்திற்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் ஏற்றதான மோட்கேஜைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.


மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும் நா. முருகதாஸ்
Mortgage specialist Savers Mortgage
phone: 416 - 423 0218
cell :416 - 543 6614
Email : das@bellnet.ca



**VALLIN SUPER MARKET**

• Fresh Vegetables • Meat
• Fish, Groceries Tamil Video & Audio Cassettes



**416-724-5453**

இவற்றுடன் இலங்கை, இந்திய, கனேடிய உணவுகளையும் தருகிறார்கள்



A VALLIN TAKEOUT & CATERING

**416-283-1260**

790 Military Trail, Unit #1, Scarborough, ON

**INCOME TAX**



Tarsem Parmar

• Incorporation
• Business Set-up & Registration
• Accounting & Bookkeeping
• Payroll, G.S.T. & P.S.T.
• Incomes Taxes (Free E-File)
• CCRA Audit and Appeals

**FINANCIAL SERVICES**



• Mortgages
upto 1.5% below the bank posted rates
• Lines of Credit
• Business Loans
• Personal Loans

**PERMANENT RESIDENT CARDS**

Free Applications filled for Seniors for PR Cards
Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992

Scarborough & Markham Area
416-937-1563
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

Brampton
416-937-1563
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)



# நாமும் நமது இல்லமும் 166

### வீடு வாங்குதலில் / விற்பதில்

Closing நாள் அல்லது Completion நாள் அன்று நடப்பது என்ன?

(1) வீடு வாங்குபவர் வீட்டின் உரிமைக்காரர் ஆகின்றார்.
(2). வீட்டிற்குரிய சாவிகள் (Keys) கிடைக்கும்.
(3) வீடு வாங்கியவர் நிதி நிறுவனங் களிற்கும், அரசிற்கும் (Property Tax) செலுத்தக் கடமைப்படுகின்றார்.

குறிப்பு:- கொண்டோமெனியம் (Condo mini-um), புதிதாக வாங்கியிருந்தால் இந்த நடைமுறையில் சிறிய வித்தியாசம் உண்டு என்பதனையும் நினைவில் கொள்க.
அனேகமான சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட சில மாதங்களின் பின்புதான்

## ராஜா மகேந்திரன்

வீடு Closing நாள் வரும் (Completion Day). இந்த நாளில் பல நல்ல விடயங் கள் நடக்கும். எனவே அதற்கு ஏதுவாக பல செய்கைகளை முற்கூட்டியே திட்ட மிட்டு செய்து வைத்திருத்தல் நல்லது.

### வாங்கியது புதிய வீடாக இருந்தால்

வீடு கட்டும் நிறுவனம், Completion Day ஐ, வீடு வாங்குபவரின் சட்டத்தரணிக்கும் வீடு வாங்கியவரிற்கும் அறிவிக்கும். வீடு வாங்கியவர் Cable, Telephone, Hydro, Water, Gas, Property Tax நிறுவனங் களுடன் புதிய கணக்கை (New Account) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் புதிய கணக்குகள் வீடு வாங்கியவரின் பெயரிற்கு மாற்றப்படும்.

Completion நாளிற்கு முன்பாக வீடு வாங்கியவரின் சட்டத்தரணி முக்கிய மான பத்திரங்களில் ஒப்பமிட அழைப்பார். அத் துடன் எவ்வளவு பணம் பெற்று வர வேண் டும் எனவும் தெரிவிப்பார். (கொண்டு செல்வதும் பணத்தின் அளவு Bank Draft அல்லது Certified Cheque ஆக இருக் கும். உதாரணத்திற்கு சட்டத் தரணியின் பெயரின் Trust இல் பெறப்பட வேண்டும். அதாவது சட்டத்தரணியின் பெயர் Siva Selvam ஆக இருப்பின் Siva Selvam in Trust ஆக எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, சட்டத்தரணி கொண்டு வரும்படி கூறும் பணத்தின் அளவில், மிகுதி முதலீடு (Balance of Downpayment) (ஏற்கனவே Depoist கொடுத்திருப்பதால்), Land Transfer Tax, சட்டத்தரணிக்குரிய செலவு முன்னைய வீட்டுச் சொந்தக்காரரால் Property Tax மேலதிகமாகக் கொடுப்பனவு செய்திருந்தால் (பழைய வீடுகளிற்கு / திருப்பி விற்கும் வீடுகளிற்கு மட்டும்) அதற்குரிய கொடுப்பனவு, Title Insurance Premium, மற்றயவை Adjust ments அடங்கும்.

குறிப்பாக Closing நாளில் பல விடயங்கள் நடைபெறும். இரண்டு சட்டத்தரணிகளும் ஒப்பமிடப்பட்ட பத்திரங்களை மாற்றிக் கொள் வார்கள். பணம் கொடுக்கப்படும், திறப்பு பெற்றுக்கொள்ளப்படும். Registry இல் புதிய பெயர் பதியப்படும்.

குறிப்பு: இப்பொழுது சில சட்டத்தரணியின் அலுவலகங்களிலும் ஒப்பமிடப்பட்ட பத்திரங்கள் இலத்திரனியல் (Electroni cally) அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்க தாகும்.


**HOUSE FOR SALE**



- MORNINGSIDE& OLD FINCH
- 4 BEDROOM DETACHED
- HARDWOOD FLOOR
- 2 BEDROOM BSMT APT.
- SEP. ENTRANCE
- 2 KITCHEN
- 4 WASHROOM
- Asking only $329,000.00

**HOUSE FOR SALE**



- BRAMPTON
- 3 BEDROOMS
- ONLY 1½YEARS OLD
- DOUBLE ATTACHED GARAGE & 2 DOORS
- BRICK HOUSE
- PRICE $264,900.00

**HOUSE FOR SALE**

- MORNINGSIDE& OLD FINCH
- 4 BEDROOM DETACHED
- DOUBLE GARAGE
- FRIDGE/STOVE/WASHER/DRYER

**CONDO FOR SALE**

- EGLINTON & MCCOWAN
- 3 BedroomS
- 2 WashroomS
- 1 Car parking
- Asking only $164,900.00

**Raja M. Mahendran,** P. Eng.
Vice President/Sales Rep.
Office - Tel.: (416) 321-6969
Direct: (416) 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 4.60% |
| Prime rate | 5% |
| Bank rate | 3.25% |




**Neelam Silk**

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

**நீலம் சில்க்**



2003ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)



**YARLCAN**

**STEAM CLEANING**



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

- DUCT CLEANING
- CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 ஸிாலல: (416) 721-9709




**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

உங்களுக்குத் தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்







www.kalakalappu.net

கலகலப்பு தீசன் 416-490-9199



# விண்வெளி 121

**கனி**

## நட்சத்திரங்கள்

சென்ற தடவையில் இராட்சத நட்சத்திரங்கள், அதி இராட்சத நட்சத்திரங்கள் எவ்விதம் தோன்றுகின்றன எனப் பார்த்தோம். 5½ பில்லியன் வருடங்களின் பின் நமது சூரியனும் ஓர் இராட்சத நட்சத்திரமாக மாறும் எனவும் அந் நேரத்தில் அதன் பருமன் வெள்ளியையும் மூடி பூமிக்கு அண்மையில் இருக்கும் எனவும் கூறியிருந்தேன் அல்லவா? அந் நேரத்தில் பூமியின் நிலை என்னவாக இருக்கும் எனப் பார்ப்போம்.

ரியனின் மேற்பரப்பு பூமிக்கு மிக அண்மையில் இருப்பதனால் பூமியின் வெப்பநிலை மிக உயர்வாக இருக்கும். நீர்நிலைகள் இருப்பதற்கான சாத்தியம் இல்லை. முற்றாகவே நீர் இல்லாது போய்விடலாம். பாரிய பூகம்பங்கள் ஏற்பட்டு பூமி சின்னாபின்னப்பட்டு போய்விடும். பூமியின் மேற்பரப்புக்கள் எங்கும் வெடிப்புக்களும் குன்றுகளும், குழிவுகளுமாகக் காணப்படும். உயிரினங்கள் இல்லாமல் போய்விடும். இன்று வளிமண்டலத்தில் உள்ள வாயுக்கள் (நைதரசன் ஒட்சிசன் போன்றவை) சூரியன் விரிவடையும் விசையின் அமுக்கம் காரணமாக பூமியின் ஈர்ப்புவிசையையும் மீறி அள்ளுண்டு எங்கோ தொலைதூரத்திற்கு காணாமல் போய்விடும். ஆக மொத்தத்தில் எமது சூரியன் இராட்சத நட்சத்திரமாக மாறுகையில் எமது பூமி முற்றிலுமே மாறுபட்டு உயிரினம் வாழத் தகுதியற்ற ஒரு கோளாக மாறிவிடும். நமது சந்திரனோ என்றால் இரண்டு துண்டாக பிளவுண்டு போய்விடும். ஒருவேளை சந்திரனின் இடையே ஒரு பாரிய பிளவு ஏற்பட்டும் கூடக் காணப்படலாம். இவை எல்லாம் நடைபெறுவதற்கு இன்னமும் சுமாராக 5½ ில்லியன் வருடங்கள் காத்திருக்க ேண்டும். அதாவது இயற்கையின் விளைவாக எமது பூமியில் உயிரினங்கள் இல்லாது ஒழிந்து போவதற்கு இன்னமும் 5½ பில்லியன் வருடங்கள் நாம் காத்திருக்க வேண்டும். அதற்கு முன்னதாக மனிதன் தன் கைங்கரியங்களினால் எமது பூமியை ஒரு வழிபண்ணிடுவான் போல் தெரிகின்றது.

இனி இராட்சத, அதி இராட்சத நட்சத்திரங்களுக்கு என்ன நிகழ்கின்றது எனப் பார்ப்போம். இவை சில மில்லியன் வருடங்களுக்கு அப்படியே இருக்கும். ஆனால் இவற்றின் மையப்பகுதி சுருங்கிக் கொண்டே போகும். இதனால் மையப் பகுதியின் வெப்பநிலை அதிகரிக்கும். இவ்வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக மத்தியில் உள்ள பாரமான அணுக்களின் உருகல் நடைபெறத் தொடங்குகின்றது. முதலில் ஈலியம் உருகல் நடைபெறும். அதன்பின்னர் ஏனைய உயிர் அணுக்களின் உருகல் நடைபெறும். இங்கு உருகல் என்பது இரண்டு அணுக்கள் உயர் வெப்பநிலையில் இணைந்து வேறு ஒரு பாரமான அணுவையும் சக்தியையும் வெளியிடுவதாகும். சில மில்லியன் வருடங்களுக்கு இது நிகழ இராட்சத நட்சத்திரங்கள் இறுதியில் வெடித்து தமது பெருமளவு திணிவை அண்ட வெளியினுள் தள்ளியபின் White dwarf எனும் வெண் குள்ளர்கள் ஆகிவிடுகின்றன. அண்ட வெளியினுள் தள்ளப்பட்ட திணிவுகள் மீண்டும் ஒன்றாக இணைந்து ஒரு புதிய நட்சத்திரத்தை பல மில்லியன் வருடங்களின் பின்னர் தோற்றுவிப்பதற்கு காரணிகளாக இருக்கின்றன.

அதிஇராட்சத நட்சத்திரங்களின் மையப் பகுதியின் அணுக்களின் உருகலானது ஈலியம் உருகலை அடுத்து இரும்பு அணுக்கள் உருகும்வரை உயர் அணுக்களின் உருகல் நடைபெறும். இறுதியில் அல்லது இடையில் அதி இராட்சத நட்சத்திரம் வெடித்து சிதறும். இவ் வெடிப்பினையே Super Novae - சுப்பர் நோவா எனக் கூறுவர். சுப்ப நோவா வெடிப்பானது அணடவெளியின் மிகப்பெரிய அதிசய நிகழ்வாகும். இந் நிகழ்வின் போது நட்சத்திரத்தின் பெருமளவு பகுதி திணிவு அண்ட வெளிக்குள் தள்ளப்படும். அதன் Core எனும் மையப் பகுதி நட்சத்திரத்தின் ஆரம்பத் திணிவுக்கு ஏற்ப Neutron Star - நியூத்திரன் நட்சத்திரம் அல்லது Black Hole கருத்துவாரம் எனும் பூதமாக மாறும்.

இதுவே நட்சத்திரங்களின் இருப்பின் போதான மேலெழுந்த வாரியான விபரமாகும் தொடரும் நாட்களில் Super Novae Black Hole, White Dwarf. Neutron Star என்பவை பற்றிப் பார்ப்போம்.


**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல


துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST. , TORONTO
(416) 921-5018

**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

**EMBASSY**

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்



• வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
• இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
• இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

Finch / Middlefield 5200 Finch Ave., Scarborough
416-332-8451

**Get PAID what you're WORTH!**

EXCEL Powered by VarTec Telecom

Would you rather work at home, draw a great INCOME and offer products you believe in? Now you can. Discover what thousands of people know is true. Excel Canada offers you the opportunity to become your own boss, and live the LIFESTYLE of your choice.

IT'S THE CHANCE TO...
• Offer high-quality products and services
• Do something you believe in
• Live the lifestyle you've always dreamed of!

It's that easy! Call today for more information.
Your SATISFACTION depends on it.


**For More Information Please Contact**
**Thiru Saravanapavan**
Senior Director
National Training Director
Tel: 416-707-7900
E-mail:thiru@myexcel.ca
Web. www.excelir.ca/thiru

**WINDOW COVERING**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS DRAPERIES AND SHUTTERS
• Venetian Blinds
• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

FREE ESTIMATE



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான. திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்
416.332.8482 /416.419.9247 / 905.201.7733



## அவுஸ்திரேலியாவின் வெற்றி பயணத்தை முறியடித்த மேற்கு இந்திய தீவுகளை சிறிலங்கா முறியடித்தது!

### விளையாட்டுத் தகவல்கள் - 125 கிரிக்கெட்

அவுஸ்திரேலியா VS மேற்கிந்தியத் தீவுகள்:-
ஒரு தினக் கிரிக்கெட்டில் தொடர்ந்து 21 முறை பெற்ற அவுஸ்திரேலியாவின் வெற்றிப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது மேற்கிந்தியத்தீவுகள். போர்ட் ஆப் ஸ்பெயினில் நடைபெற்ற 5 - வது ஒரு தின ஆட்டத்தில், மேற்கிந்தியத் தீவுகள் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தது. அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 4 ஆண்டு களுக்குப் பிறகு மே.இ.தீவுகள் பெறும் வெற்றி இது. கடைசியாக, பிரிட்ஜ் டவுனில் நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் வென்றது. அதன் பிறகு தொடர்ந்து 11 ஆட்டங்களில் தோல்விமுகமே.


அதே சமயம், அவுஸ்திரேலியா கடந்த ஜனவரியில் சிட்னியில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையிடம் கடைசியாகத் தோல்வியுற்றது. லாரா அபாரம்: டாஸ் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பிரையன் லாரா அணி, நிர்ணியிக்கப்பட்ட ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 290 ஓட்டங்களைக் குவித்தது. வேவல் ஹைன்ட் ஸீம், காப்டன் லாராவும் பொறுப்புடன் விளையாடி அணியின் எண்ணிக்கையை கிடுகிடுவென உயர்த்தி அவுஸ்திரேலியாவுக்கு சற்றுக் கடினமாக இலக்கை நிர்ணயித்தனர். ஹைன்ட்ஸ் 90 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். லாரா அவரை விட 1 ஓட்டம் குறைவாகச் சேர்த்தார். அவரது எண்ணிக்கையில் 11 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும். இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 178 ஓட்டங்களைக் குவித்தது. தொடர்ந்து ஆடிய உலகசம்பியன் அவுஸ்திரேலியா 50 ஒவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 251 ஓட்டங்களைச் சேர்த்து தோல்வியுற்றது. அணியிலேயே அதிகபட்சமாக சைமண்ட்ஸ் 77 ஓட்டங்களை குவித்தார். அவருக்கு அடுத்தபடியாக கிளார்க் 39 ஓட்டங்களையும், பேவன் 31 ஓட்டங்களையும் சேர்த்தனர். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்ட மிழந்தனர். தில்லான் 3 விக்கெட்டுக்களையும், காலிமூர், சாமு வேல்ஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி எதிராளிகளை ஸ்தம்பிக்க வைத்தனர். அவுஸ்திரேலியாவின் தொடர் வெற்றியை லாராவின் சொந்த மண்ணில் தடுத்து நிறுத்தியதால், ரசிகர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். கடைசி 3 ஆட்டங்களையும் மே.இ.தீவுகள் தொடரை வென்றது. ஆஸி: முன்னதாக இதே மைதானத்தில் சனிக் கிழமை நடைபெற்ற 4-வது ஆட்டத்தில், மேற்கிந்தியத் தீவுகளை 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து 4-3 என தொடரை வென்றது அவுஸ்திரேலியா.

சிறிலங்கா VS மேற்கிந்திய தீவுகள் :-
பிரிட்ஜ்டவுன் (பார்படோஸ்). ஜீன் 9: பார்படோஸில் சனிக்கிழமை நடைபெற்ற முதல் ஒருதினக் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியதீவுகளை வென்றது.

முதலில் ஆடிய இலங்கை 48.4 ஓவர்களில் 201 ஓட்டங்களால் ஆட்டமிழந்தது.
தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 41 ஓவர்களில் 146 ஓட்டங்களால் ஆட்டமிழந்தது. மேற்கிந்தியத்தீவுகள் 19 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் முதல் 4 விக்கெட்டுகளை இழந்தது. காப்டன் பிரையன் லாரா சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்கள் எடுத்தும் அணியை வெற்றி பெற வைக்க முடியவில்லை. முரளீதரன் 17 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார்.

சுருக்கமான ஸ்கோர்:
இலங்கை 47.4 ஓவர்களில் 201 (கலுவித்தரண 54, தர்மசேன 40, தில்லான் 3-39)
மேற்கிந்தியத்தீவுகள்: 41ஓவர்களில் 146 (லாரா 64, ஆட்டமிழக்காமல், முரளீதரன் 3-17, வாஸ் 2-16, நிஸாங்கா 2-27).

தொடரை வென்றது சிறிலங்கா :-



பிரிட்ஜ்டவுன் (பார்படோஸ்), ஜீன் 10: பார்படோலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2-வது ஒரு தினக் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.
முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 312 ஓட்டங்களைக் குவித்தது. தொடர்ந்து ஆடிய இலங்கை 49.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்களை எடுத்தது.
மேற்கிந்திய தீவுகள் காப்டன் பிரையன் லாரா அபாரமாக ஆடி 106 பந்துகளில் 2 சிக்சர்கள், 8 பவுண்டரிகளுடன் 116 ஓட்டங்களை எடுத்தார். ஒரு தின ஆட்டங்களில் லாராவின் 17-வது சதம் இது.

**எஸ். கணேஷ்**

கெயில் 2 சிக்சர்கள், 12 பவுண்டரிகளுடன் 94 ஓட்டங்களும், சாமுவேல்ஸ் 36 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்கள் எடுத்தார்.

சாமுவேல்ஸ், லாரா இணைந்து 4-வது விக்கெட்டுக்கு 55 பந்துகளில் 109 ஓட்டங்கள் எடுத்தனர். இலங்கை தொடர்ந்த போது, சந்தனா 71 பந்துகளில் 4 பிரமாண்ட சிக்சர்கள், 6 பவுண்டரிகளுடன் 89 ஓட்டங்களை எடுத்து அணிக்கு வெற்றி தேடித்தந்தார்.
இவ்வெற்றி மூலம், 3 ஆட்டங்கள் கொண்ட இத்தொடரை இலங்கை வென்றுள்ளது.

இதே மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.
சுருக்கமான ஸ்கோர்:
மேற்கிந்தியத் தீவுகள்: 50 ஓவர்களில் 312-4 (லாரா 116, கெயில் 94, சாமுவேல்ஸ் 56 ஆட்டமிழக்காமல்)
இலங்கை: 49.3 ஓவர்களில் (சந்தனா 89, அத்தபத்து 47, டிரேக்ஸ் 2-49).


இலங்கை கிரிக்கெட் வாரிய தலைவர் தேர்தல் - ரணதுங்க படுதோல்வி
கொழும்பு, ஜுன் 7: இலங்கை கிரிகெட் வாரியத் தலைவர் பதவிக்கான தேர்தலில் முன்னாள் காப்டன் அர்ஜுன ரணதுங்க படுதோல்வி அடைந்தார்.

தலைவர் பதவிக்கு போட்டியிட்ட திலங்க சுமதிபால 144 க்கு 121 வாக்குகளைப் பெற்றார். ரணதுங்க வெறும் 7 வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது.

2001 டிசம்பரில் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ரணதுங்க நாடாளுமன்ற உறுப்பினரானது குறிப்பிடத்தக்கது. வாரியத்தின் மற்ற பதவிகளுக்குமே சுமதிபால நிறுத்தியவர்கள் அனைவருமே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலங்கையின் கிரிக்கெட் வளர்ச்சிக்காக சேர்ந்து பாடுபடுவோம் என்ற சுமதிபாலவின் அழைப்பை ரணதுங்க நிராகரித்தார். ஊழல் பேர்வழிகளுடன் இணைந்து பணியாற்ற முடியாது என ரணதுங்க கூறியிருந்தார்.

சிம்பாவேக்கு மீண்டும் இனிங்ஸ் தோல்வி அளித்தது இங்கிலாந்து. செஸ்டர் லீ ஸ்ட்ரீட் ஜுன் 9: செஸ்டர் லீ ஸ்ட்ரீடில் நடைபெற்ற ஜிம்பாப்வேக்கு எதிரான 2-வது கிரிக்கெட் டெஸ்டில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வென்றது. 3ஆம் நாளான சனிக்கிழமை தேநீர் இடைவேளைக்குப் பின்னர், ஜிம்பாப்வே தனது 2 - வது இன்னிங்ஸில் 253 ஓட்டங்களால் ஆட்டமிழந்தது. ஜிம்பாப்வேயின் டிரெவிஸ் ஃபிரெண்ட் ஆட்டமிழக்காமல் 10 பவுண்டரிகளுடன் 65 ஓட்டங்களும், டியன் இப்ராஹிம் 55 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்தின் ஸ்டீவ் ஹார்மிசன், ஆன்டர்சன் தலா 55 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.
2 டெஸ்ட்கள் அடங்கிய இத் தொடரில், லார்ட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்டில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.
டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ந்து 9 -வது முறையாக ஜிம்பாப்வே தோல்விலைத் தழுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.
சுருக்கமான ஸ்கோர்:
இங்கிலாந்து: 416 (அந்தோனி மெக்ராத் 81, ஸ்டுவர்ட் 68, ஜைல்ஸ் 50, ஸ்ட்ரீக் 4-64)
ஜிம்பாப்வே: 94 (ரிச்சர்ட் ஜோன்சன் 6-33) 93.4 ஒவர்களில் 253 (ஃபிரெண்ட் 65 ஆட்டமிழக்காமல், ஆன்டர்சன் 4-55 ஹார்மிசன் 4-55).

# யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**

# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*



*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply



**For more information call:**
**Anil Joshi at**
**416.888.1072**

# வள்ளுவர் காட்டும் "கோடி"



க (1) உ(2) ங(3) ச(4) ரு(5) சா(6) எ(7) அ(8) கூ(9) ய(10) ள(100) சூ(1000). இவை எண்களைக் குறிக்கும் தமிழ் எழுத்துக் களாகும். எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்பது தமிழர் கோட்பாடு.

"எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்றார் வள்ளுவர். எமது நாளாந்த வாழ்வில் எண்ணும் எழுத்தும் முக்கிய இடம் பெறுகின்றன. அவையே வாழ்வின் அடிப்படை

**நா. க. சிவராமலிங்கம்**

யாகும். வள்ளுவர் முப்பாலில் தப்பாமல் எப்பொழுதும் அப்பப்போது இடம் பெறும் எண்கள் இரண்டும், மூன்றும், நான்குமாகும். இவற்றுடன் ஐந்து என்ற இலக்கத்தையும் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் ஆறு, ஏழு, எட்டு என்ற எண்களை அருமை யாகவே பயன்படுத்தியுள்ளார். ஒன்பது, பத்து என்ற எண்களை ஒரிரு சந்தர்ப்பங் களிலேயே பயன்படுத்தியுள்ளார்.

இருள் சேர் இருவினை, தானம் தவம் இரண்டும் அன்புடமை ஆன்றகுடிப்பிறத்தல் இவ்விரண்டும் என்பன இரண்டு எண்களுக் குரிய உதராணங்களாகும். காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும், தூங காமை, கல்வி, துணிவுடமை இம்மூன்றும் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் இம் மூன்றும் என்பன மூன்று என்ற எண்ணுக்குரிய உதாரணங்களாகும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்நான்கும். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந நான்கும், கொடை, அளி செங்கோல், குடி ஓம்பல் நான்கும் என்பன நான்கு எண்ணிற்கும், பொறிவாயில் ஐந்து அவித்தான், உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ஐந்து எண்ணிற்கும், அறு தொழிலோர் என்பது ஆறு எண்ணிற்கும், எழு நாள் ஏழுபிறப்பு என்பன ஏழு எண்ணிற்கும், எண்குணத்தான் என்பது எட்டு எண்ணிற்கும் உதாரணங்களாகும். ஒன்பது என்ற எண்ணை வள்ளுவர் ஒருபோதும் பயன்படுத்தவில்லை. பத்து என்ற எண்ணை இரண்டே குறள்களில் தான் குறிப்பிட்டுள்ளார்.

கோடி என்பது இருபொருள்படும். அது ஒரு எண்ணைக் குறிப்பிடுவதுடன் வீட்டின் பின் புறத்தையும் குறிக்கும். மேலும் கோடி என்பது புதிய புடவையையும் குறிக்கும். 1000 x 1000 இது கோடியாகும். வள்ளுவர் தனது குறிளில் கோடி என்ற சொல்லை நான்கு முறை பயன்படுத்தியுள்ளார். அவை பின்வருமாறு:

ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப<br>கோடியு மல்ல பல (குறள் 337)

இதன்பொருள் கணப்பொழுதும் வாழும் வகை அறியார் - கோடி மட்டுமன்று அதற்கு மேலும் எண்ணம் கொள்வர்.

நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்<br>பத்தடுத்த கோடி உறும் (குறள் 817)

கோமளிக் கூத்தாடிகள் கூட்டுறவால் வரும் இனபத்தைவிட பகைவரால் வரும் பகைமை கோடி மடங்கு நல்லதாம்.

பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்<br>எழுபது கோடி உறும் (குறள் 639)

தீமைசெய்யும் அமைச்சனைவிட எழுபது கோடிப் பகைவர் பக்கத்திலிருத்தல் நல்ல தாகும்.

கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்<br>இரவாமை கோடி உறும் (1061)

உள்ளதை ஒழிக்காமல் அகமகிழ்ந்து கொடுக்கும் சிறந்தவரிடத்தும் இரவாது வாழ்வது கோடிமடங்கு நல்லதாம்.

வள்ளவருடன் தமிழ்மூதாட்டி ஒளவையாரும் கோடிபற்றி குறிப்பிட்டுள்ளார்.

"கோடி கொடுக்கும் குடிப்பிறந்தார் தம்மோடு<br>கூடுவது கோடி பெறும்"

என்பது அவரது மூதுரையாகும்.


**RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.**

RE/MAX Golden Way Realty Inc.



வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

Office: 416-299-8199
Home: 416-516-9897
Pager: 416-510-7755

3390 MIDLAND AVE.
UNIT 8, TORONTO, ON.
M1V 5K3

**J.A.B. TRAVELS & TOURS**


*Top Sales Award for Cathy pacific*

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமேரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம் J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ON
(905) 896-8320

## "...WHERE EVERYTHING IS A-1!"

**A1 SWEETS & RESTAURANT**





TAKE - OUT
DINE - IN
CATERING

Special price 11, 12, 13 April Only

100% Vegetarian Indian Cuisine

*Enjoy our home-cooked taste!*
*Ask for our daily specials*

Introducing special New Sweets For Dusserah &Diwali!

TUESDAYSPECIAL
- MAKKI KI ROTI
- SARSON KA
- SAAG & LASSI ($3.99)

note
- BUY 3 THALI GET 4TH ONE FREE
- SPEND MORE THAN $50.00 GET A GIFT

- Appetizers
- Main Dishes
- Side Orders
- Indian Breads
- Namkins
- Sweets
- Desserts
- Beverages
- Veggie Thali ($4.99 + tax)
- Channa Bhatura ($2.99 + tax)

416-299-9424 1-866-422-1322

3300 McNicoll Ave. (at Middlefield), Near Scarborough Sikh Temple

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



**லலிதா புரூடி**

உலகெங்கும் பரந்து செறிந்து வாழ் தமிழருக்குப் பக்திமார்க்கம் பரம்பரை பரம்பரையாகத் தொடரும் பழக்கம். ஆனால் மேற்கத்தைய மக்கள் பலர் கடவுள் இருக்கிறாரா இல்லையா எனும் சந்தேகத்துடன், சிருஷ்டியே 'Big Bank' எனும் ஒரு அணுவின் பிளவினால் ஏற்பட்ட மாபெரும் அதிர்வு நிகழ்வின் பக்க விளைவு தான் என்ற வாதத்துடன், ஒருவித இறை உணர்வும் இல்லாது வாழ்ந்து மடிவதைக் காணும் சில புலம் பெயர்ந்த தமிழரும் இக்கொள்கையை நம்ப ஆரம்பித்துள்ள உண்மையை நாம் மறுக்க முடியாது.

மானிட வாழ்வின் உண்மையான குறிக்கோள் தான் என்ன? மண் மீது பிறந்து வளர்ந்து உண்டு, உடுத்து சிற்றின்பம் துய்த்து வாடி வதங்கி மடிவது தானா?

பற்பல காலமாய் நியதியுடனியங்கிடும்
கற்பனைக்கெட்டாச் சிருஷ்டியதனில் ஓர்
அற்பத்துகள் மட்டுமே மனித உடல், மனித வாழ்வு என்பதை
பொறப்புடன் மாந்தர் உணர்ந்திட இவ்வளவு சிரமம் ஏன்?
மண்மீது பிறந்து வாழ்ந்து
எண்சாண் உடல் வளர்த்துயிர் வாழ்
எண்ணுதற்கரிய ஜீவராசிகள் ஒவ்வொன்றும்
தனித்துவத்துடன், தன்போல் பிறிதொன்றின்றிக்
கெட்டித்தனமாய்ப் படைத்துலகைச்
சுட்டித்தன நியதியுடன் இயக்கிடும்
பேரறிவாம் இறைவன் சக்தி தான் எத்தகையது?
ஒரு முகம் போல் பிறிதொன்றில்லை!
ஒரு இலை போல் வேறொன்றில்லை,
ஒரு அலைபோல் மற்றொன்றில்லை.
சந்ததம் இத்தனையையும் இயக்குவித்துப்
பாலினைக் கடைந்திடத் திரளும் வெண்ணெயாய்க்
கரந்துறைந்து பொம்மலாட்ட மாட்டிடும் அரங்கள் லீலைகளை
சிரந்தாழ்த்தி ஏற்றுச்சரணடைந்து வாழ்ந்துய்ந்திடாது
பம்பரமாய் மாயையில் வழிதவறுவது கலிகாலக் கொடுமையோ?
நீர் எனும் ஒரேயொரு பதார்த்தத்திற்குச்
சேர் பல இன மொழிப்பெயர்கள் எத்தனை எத்தனை?
ஒரேயொரு இறைசக்தியையே சர்வ இன மதங்களும்
தமக்குகந்த வெவ்வேறு நாம ரூப கிரியைகளினால் போற்றித் துதிக்கின்றன.
இறையருட்சக்தியின் சிறு பொறியாம் ஆன்மாவே
சகல ஜீவராசிகள் உடல்களிலும் உறைகையில்
பிறஉயிர்க்கு நாம் விளைவிக்கும் பாதகம்
தீமை, வன்செயல், சித்திரவதை, உயிர்க்கொலை, உண்மையில்
எமை நாமே தண்டித்துக் கொள்வது தான்!
எம் கர்மவினைகளின் பயன் ஈற்றில்
எமைத்தான் தவறாது தேடி வந்தடையும்
எனும் பேருண்மையைச் சகலரும் புரிந்து வாழ்ந்தால்..........

உலகெங்கும் பரந்து செறிந்து வாழ் தமிழர்களே!
இந்து, கிறிஸ்தவ, முகமதியக் குடி மக்களே!
சற்று நிதானித்துச் சிந்தித்துப் பாருங்கள்!
இனியவன் மனிதன் இனியவன்.
அவனிதனில் வாழ் சகல இன
மனிதனும் இயற்கையில் இனியவன்.
தனித்துவச் சிறப்பு மிக்கவன்.
மனிதன் வெறும் உடலெனும் இயந்திரமல்ல.
ஐம்புல உணர்ச்சி மனமுமல்ல, அவன்
ஆண்டவன் மறுபதிப்பாம் ஆத்மஸ்வரூபி
சண்டமாருதமாம் மாயைச் சுழலிற் சிக்கி
ஆண்டாண்டுதோறும் அழுதிட மடிந்து
மீண்டும், மீண்டும் கர்ம வினை அறுந்திடுமட்டும்
பூண்டாகிப் புல்லாகிப் பல் மிருகமாகி
வண்டாகி வாத்தாகிப் பறவையாய்ப் பாம்பாய்க்
கிடைத்தற்கரிய இம்மானிடப்பிறவிச் சந்தர்ப்பத்தினில்
எம் ஒவ்வொருவருள்ளும் உறங்கிடும் இறை தத்துவத்தினை
அன்பு, அஹிம்சை, சத்யம், தர்மம், சாந்தி,
மன்னிப்பு, சகோதரத்துவம், கருணை சேவையெனும்
மனித மேம்பாடுகளினால் சிறு வயதிலிருந்தே
தட்டியெழுப்பிக், கெட்டித்தனமாய் இறைஸ்வரூபடைய
கட்டித்தங்கக் கடவுளளித்த வாய்ப்பிதனை மறந்து
போர், போட்டி, பொறாமை, வன்செயல், சுயநலவளர்ப்பு,
உயிர்க்கொலை, பழிவாங்குதலில் வீணே
உழன்று மாய்ந்திடுதல் நன்றோ,
சிறிது சிந்தித்திடுவீர்............

ஆமாம் அன்பானவர்களே! மானிட வாழ்வின் குறிக்கோள் நாமும் இறைஸ்வரும் அடைவது தான். உண்மையில் அமுதமும், நித்யத்துவமும் நிறைந்த இடமல்ல, மோட்சம். எம் ஒவ்வொருக்கும் கிட்டக்கூடிய சுயநலம் மறந்த மனதின் மகோன்னத உயர்நிலை தான் உண்மையான ஸ்வர்க்கம் என்பதை உணர்ந்து, நாம் பயபக்தியுடன் இறைவனை சரணடைந்ததும் தெய்வீக அருள் எமைச்சூழ்ந்து, எமை வழிநடத்த ஆரம்பிக்கிறது. இது அநுபவத்தினால் நான் கண்டறிந்த உண்மை. பத்தாம் வகுப்பு மட்டுமே யாழ்நகர் சுண்டிக்குளி மகளிர்கல்லூரியில் கற்ற என்னை, இவ்வாறு தொண்டாற்றிட நான் சரணடைந்த இறைவன் வழிநடத்தி முன்னேற்றுவதற்காக நன்றிப் பெருக்கால் என் இதயம் பொங்கி வழிகின்றது!


மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


pundit prithipal



astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*



Black Magic removal in 24 hours!

Guaranteed results in 7 days!

